

நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆலந்தூர் தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் தா.மோ. அன்பரசன் ஆலந்தூர் தெற்கு பகுதி, 163, 165வது வட்டத்தில் தேர்தல் பணியாற்றிய கழக நிர்வாகிகளுக்கும் இயக்கத் தோழர்களுக்கும் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். அருகில் ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளர் என். சந்திரன், பகுதிச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், வட்டச் செயலாளர்கள் கே.ஆர். ஜெகதீஸ்வரன், வேலவன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## ஆபரேஷன் சிந்தூரின் போது பாகிஸ்தானுக்கு உதவி செய்தோம்!

### முதல் முறை ஒப்பு கொண்டுள்ள சீனா!

பெய்ஜிங், மே 11-

கடந்த ஆண்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நடைபெற்ற ராணுவ ரீதியி லான மோதலின் (ஆபரேஷன் சிந்தூரின்) போது, பாகிஸ்தானுக்கு நேரடியாக தொழில்நுட்ப உதவியை வழங்கியதாக சீனா முதன் முறையாக ஒப்பு கொண்டுள்ளது.

கடந்த 2025ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் தேதி, ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் 26 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து,

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மோதல்கள் தீவிரமடைந்தன. இந்நிலையில் சவுத் சீனா மார்னிங் போஸ்ட் வெளியிட்ட ஓர் அறிக்கையில் இது குறித்த தகவல் வெளியாகியுள்ளது. சீனாவின் மேம்பட்ட போர் விமானங்கள் மற்றும் ஆளில்லா வான்வழி விமானங்களின் வடிவமைப்பில் முக்கியப் பங்காற்றும், சீன விமானத் தொழில் கழகத்தின் விமான வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த பொறியாளர் ஜாங் ஹெங் என்பவருடனான நேர்காணலை, அந்நாட்டின் அரசு ஒளிபரப்பு நிறுவனம் ஒளிபரப்பியதாக 'சவுத் சீனா மார்னிங் போஸ்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

AVICன் 'Chengdu Aircraft Design and Research Institute'ஐ சேர்ந்த பொறியாளர் ஜாங் ஹெங், பாகிஸ்தானுக்குத் தொழில்நுட்ப உதவி வழங்கிய குழுவில் தானும் ஒருவராக இருந்ததாக கூறி இருக்கிறார். சீனாவின் நவீனப் போர் விமானங்கள் மற்றும் ஆளில்லா விமானங்களை (ட்ரோன்கள்) உருவாக்குவதில் இந்நிறுவனம் புகழ் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜாங் தனது பேட்டியில் கூறியதாவது: "எங்கள் தளத்தில் இருந்த போது, போர் விமானங்கள் புறப்படும் சத்தம், வான்வழித் தாக்குதல் எச்சரிக்கைச் சைரன்களின் இடைவிடாத அலறலை நாங்கள் அடிக்கடி கேட்டோம். கடந்த மே மாதத்தில், காலைப் பொழுதின் பிற்பகுதியிலேயே வெப்பநிலை 50 டிகிரி செல்சியஸை எட்டியது. இது எங்களுக்கு உடல் மற்றும் மனதளவில் ஒரு உண்மையான கடும் சோதனையாக இருந்தது. சீன தரப்பில் இருந்து பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முழுத் திறனுடன் செயல்படுவதை உறுதி செய்வதே எங்கள் குழுவிற்கான பணியாக இருந்தது என்று கூறியுள்ளார்.

இதனிடையே கடந்த ஆண்டு பாகிஸ்தானின் ராணுவத் தளவாடங்களில் 81 சதவீதம் சீனத் தயாரிப்புகள் என்றும், சீனா தனது ஆயுதங்களுக்கான ஒரு "நேரடிப் பரிசோதனைக் களமாக" பாகிஸ்தானைப் பயன்படுத்தி வருவதாகவும் இந்திய ராணுவம் தகவல் தெரிவித்திருந்தது. ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) தரவுகளின்படி, 2015ஆம் ஆண்டிலிருந்து சீனா பாகிஸ்தானுக்கு 8.2 பில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுதங்களை விற்பனை செய்துள்ளது. மேலும் 2020 முதல் 2024 வரையில் உலகின் நான்காவது மிகப் பெரிய ஆயுத ஏற்றுமதி நாடாக சீனா இருந்தது, இந்த காலகட்டத்தில் அதன் மொத்த ஆயுத ஏற்றுமதியில் 63 சதவீதம் பாகிஸ்தானுக்கு இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆபரேஷன் சிந்தூரின் போது மொத்தம் மூன்று எதிரிகளை எதிர்கொண்டதாக இந்தியா கூறி இருந்தது. இதில் பாகிஸ்தான் நேரடி எதிரி என்றாலும் அதற்கு ஆயுதங்கள் வழங்கி ஆதரவளித்தது சீனாவும், துருக்கியும் என்று ராணுவத் துணை தலைமைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ராகுல் ஆர். சிங் கடந்த ஜூலை 2025ல் கூறி இருந்தது குறிப்பிடத்தக்கது.

### பென்னாகரம் – நாகமரை கிராமத்தில்

## காவிரி ஆற்றங்கரையின் அழகை ரசிக்க காட்சி முனை அமைப்பு!

### சுற்றுலாத் துறை ஏற்பாடு – மாவட்ட ஆட்சியர் ஆய்வு!

தருமபுரி, மே 11-

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், நாகமரை கிராமத்தில், சுற்றுலா துறையின் சார்பில் காவிரி ஆற்றங்கரையின் அழகை ரசிக்க சுற்றுலாப் பயணிகளுக்காக ரூ.109.00 இலட்சம் மதிப்பீட்டில் காட்சி முனை (View Point) அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ், நேற்று (09.05.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், நாகமரை கிராமம், காவேரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஒரு அழகிய கிராமம். மேட்டூர் அணைக்குப் பின்னால் அமைந்துள்ள இந்தக் கிராமத்தின் இயற்கை அழகை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், இப்பகுதியில் சுற்றுலாத் துறையின் சார்பில் சுற்றுலாப் பயணிகளுக்காக காட்சி முனை (View Point) அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள காட்சி முனையினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் இன்று நேரில் பார்வையிட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், ஏரியூர் ஊராட்சி ஒன்றியம், சுஞ்சல்நத்தம் பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.2.15 இலட்சம் மதிப்பீட்டில் மாபெரும் மரக்கன்றுகள் நட்டு வைக்கும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் திரு. ரெ.சதீஸ், இ.ஆ.ப., அவர்கள் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தொடர்ந்து, தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் உள்ள நுழைவு வாயில், பார்வையாளர் மாடம், டிக்கெட் கவுண்டர், பரிசல் நிறுத்துமிடம், பரிசல் சென்றடையும் பகுதி, மசாஜ் பகுதி, ஆழ்துளைக்கிணறு, உணவகம், சொகுசு நடைபாதை, எண்ணெய் கழிவு சுத்திகரிப்பு நிலையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களை மாவட்ட ஆட்சியர் ரெ.சதீஸ் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட சுற்றுலா அலுவலர் திருமதி.எம்.சங்கீதா, பென்னாகரம் வட்டாட்சியர் ஆறுமுகம், ஏரியூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் குமரேசன், திருமதி.ரேணுகா, பென்னாகரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லோகநாதன், ஜோதிகணேசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### நாகப்பட்டினம் – தமிழ்நாடு

## மீன்வளப் பல்கலைக்கழக இளநிலைப் பட்டப்படிப்பு சேர்க்கை!

### இணைய வழியில் 15.5.2026 முதல் விண்ணப்பிக்கலாம்!

நாகை, மே 11-

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் (TNJFU) மாண்புமிகு துணைவேந்தர் அவர்கள், இவ்வருட (2026--27) இளநிலைப் பட்டப்படிப்பு சேர்க்கைக்கான இணைய வழி விண்ணப்ப பதிவு 15.05.2026 முதல் தொடங்கும் என்று அறிவித்துள்ளார். பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் 10 உறுப்பு கல்லூரிகள் மற்றும் 1 இணைப்பு தனியார் கல்லூரி மூலம் மொத்தம் 8 இளநிலைப் படிப்புகள் (5 தொழில்முறை மற்றும் 3 துணைத் தொழில்முறை படிப்புகள்) பல்கலைக்கழகத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

மேலும், இக்கல்வியாண்டில் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் 416 மாணவர்களும்,இணைப்பு தனியார் கல்லூரியில் 60 மாணவர்களும் சேர்க்கப்பட உள்ளனர். இதில் பல்வேறு ஒதுக்கீடுகள் [ICAR ஒதுக்கீடு 18 இடங்கள், சிறந்த விளையாட்டு வீரர்கள் - 4 இடங்கள், முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுகள் - 4 இடங்கள், திருநங்கை/திருநம்பி 8 இடங்கள், மாற்றுத்திறனாளிகள் (அனுமதிக்கப்பட்ட இடங்களில் 5%), அரசு பள்ளியில் பயின்ற மாணவர்கள் (அனுமதிக்கப்பட்ட இடங்களில் 7.5%), தொழிற்கல்விப் பிரிவு மாணவர்கள் (அனுமதிக்கப்பட்ட இடங்களில் 5%)] மற்றும் இதர பிரிவுகள் [அந்தமான் & நிக்கோபார் தீவுகள் - 7 இடங்கள் (B.F.Sc.- 2 & B. Tech.- 5), மீனவர் சமூக வாரிசுகள் - 25 இடங்கள் (5% & 15%), வெளிநாட்டு இந்தியர்கள் (NRI) 14 இடங்கள், வெளிநாட்டவர்கள் - 5 இடங்கள், காஷ்மீர் இடம்பெயர்ந்தோர் - 2 இடங்கள் [B.F.Sc. மற்றும் B.Tech. (Fisheries Engineering) தலா ஒன்று], இலங்கைத் தமிழ் அகதிகள் - B.F.Sc. 2 இடங்கள் மற்றும் B.F.Sc. சுயநிதி இடங்கள் - 20] அடங்கும்.

மீனவர் சமூக ஒதுக்கீட்டின் கீழ் (அனுமதிக்கப்பட்ட இடங்களில் 5%) சேர்க்கை பெறும் மாணவர்களின் கல்விக் கட்டணத்தை தமிழ்நாடு மீனவர் நல வாரியம் (TNFWB) ஏற்கும். ஆகவே, தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர் சமூக மாணவர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தில் சேரலாம். சிறப்பு பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் மாணவர்கள், இணைய வழி விண்ணப்பத்தை நிரப்பும் போது தேவையான சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இளநிலைப் படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் விளக்கக் கையேடு (Prospectus) ஆகியவற்றை 15.05.2026 முதல் பல்கலைக்கழக இணையதளமான www.admission.tnjfu.ac.in இல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையவழி விண்ண ப்பத்தை சமர்ப்பிக்க கடைசி நாள் 14.06.2026 மாலை 05.00 மணி வரை ஆகும். விண்ணப்பங்களை தபால் மூலம் அனுப்ப வேண்டாம் என்று மாணவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம் SC / SCA / ST மாணவர்களுக்கு ரூ.250/-மற்றும் பிற பிரிவினருக்கு ரூ.500/- ஆகும்.

மேல்நிலைத் தேர்வில் (HSC) பெற்ற கட்-ஆஃப் மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும். கலந்தாய்வு (Counselling) இணைய வழியில் நடைபெறும்.

ஆனால், சிறப்பு பிரிவின் கீழ் விண்ணப்பி த்துள்ள மாணவர்களுக்கான கலந்தாய்வு நேரடியாக நடைபெறும்; அதன் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று துணைவேந்தர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் தகவலுக்கு விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தை தொடர்ந்து பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## புலம்பெயர்வு மேலாண்மையில் முழுமையான அணுகுமுறை கடைப்பிடிப்பு!

### ஐ.நா.வில் இந்தியா தகவல்!

புதுடெல்லி, மே 11-

'புலம்பெயர்வு நிர்வாகத்தில் புலம்பெயர்வோரின் நலன், பாதுகாப்பு, அதிகாரமளித்தலை மையமாகக் கொண்ட ஒரு முழுமையான அணுகுமுறையை இந்தியா பின்பற்றி வருகிறது' என்று வெளியுறவுத் துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

'புலம்பெயர்வு நிர்வா கத்தில் புலம் பெயர்வோரின் நலன், பாதுகாப்பு, அதிகாரமளித்தலை மையமாகக் கொண்ட ஒரு முழுமையான அணுகுமுறையை இந்தியா பின்பற்றி வருகிறது' என்று வெளியுறவுத் துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்தார்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள ஐ.நா. சபை அலுவலகத்தில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச புலம்பெயர்வு மறுஆய்வு மன்றத்தின் அமர்வில் பங்கேற்றுப் பேசியபோது இக் கருத்தை அவர் தெரிவித்தார். அவர் மேலும் பேசியதாவது:

இந்தியர்களின் புலம்பெயர்வு வரலாறு பரந்த, ஆற்றல் மிக்கதாகும். உலகம் முழுவதும் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் 3.4 கோடிக்கும் அதிகமான இந்தியர்கள் புலம்பெ யர்ந்து, பல நூற்றாண்டுகளாக பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் மட்டுமன்றி கருத்துகளை இணைக்கும் பாலமாகவும் செயல்பட்டு வருகின்றனர்.

அவ்வாறு புலம்பெயர்ந்த வெளிநாடு வாழ் இந்தியர்கள் சொந்த நாட்டுக்குப் பணம் அனுப்புவது, முதலீடுகள் மற்றும் அறிவுசார் பரிமாற்றம் ஆகியவற்றின் மூலம் இந்தியாவின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி, அவர்கள் புலம்பெயர்ந்துள்ள நாட்டின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி வருகின்றனர்.

இத்தகைய சூழலில், புலம்பெயர்வு நிர்வாகத்தில் புலம்பெயர்வோரின் நலன், பாதுகாப்பு, அதிகாரமளித்தலை மையமாகக் கொண்ட ஒரு முழுமையான அணுகுமுறையை இந்தியா பின்பற்றி வருகிறது. வலுவான ஆள் கடத்தல் தடுப்பு சட்டங்கள் அவசியம்:

இடப்பெயர்வு என்பது மக்கள் மற்றும் அவர்களின் விருப்பங்கள், மீள்திறன், பங்களிப்புகள் தொடர்புடையது ஆகும்.

சட்டவிரோத இடப்பெயர்வு, ஆள்கடத்தல், சமூக பாதுகாப்பில் உள்ள இடைவெளிகள் போன்ற சவால்களை எதிர்கொள்ளும் அதே வேளையில் அனைவரையும் உள்ளடக்கிய, மனிதாபிமான, எதிர்காலத்துக்கு உகந்த ஒரு கட்டமைப்பை உருவாக்க இந்தியா முயற்சித்து வருகிறது.

அகதிகள் விவகாரத்தை புலம் பெயர்ந்தோரை பாதுகாத்தல், இடம்பெயர்வு செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்தையும் மேற்பார்வை யிடுதல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை வளர்த்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் ஒரு முழுமையான மற்றும் நடைமுறைக்கு உகந்த கட்டமைப்பு மூலம் இந்தியா நிர்வ கிக்கிறது என்றார்.

மேலும், பல்வேறு நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்பவர்களின் நலனுக்காக இந்தியா அறிமுகப் படுத்தியுள்ள 'இமைக்ரேட்' வலைதளம் குறித்தும் அந்த நிகழ்ச்சியில் கீர்த்தி வர்தன் சிங் விவரித்தார். இந்த வலைதளம் மூலம் பதிவு செய்த மற்றும் மோசடி பட்டியலில் வைக்கப்பட்டுள்ள வெளிநாடு வேலைவாய்ப்பு முகவர்களின் விவரங்கள், தனது விண்ணப்பத்தின் நிலை உள்ளிட்ட பல்வேறு விவரங்களை புலம்பெயர்வோர் தெரிந்துகொள்ள முடியும் என்பதோடு, தங்களின் புகார்களையும் பதிவு செய்ய முடியும் என்று குறிப்பிட்டார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செ. கந்தப்பன்

### மே 11 (1990)



கழக கொள்கை விளக்க அணிச் செயலாளராகவும், இருமுறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒரு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். இவர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தலைவராக ஐந்தாண்டு காலம் பணியாற்றியபோதுதான் கிராமங்கள்தோறும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டன.

1965ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப்போரில் பங்கேற்று சிறை சென்றார். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறையில் இருந்தவர்.

"ஆழ்ந்த அரசியல் ஞானமும், அப்பழுக்கற்ற கொள்கை உறுதியும், கழகம் காப்பதில் கடமை உணர்வும் என்னை "அண்ணே" என்று அழைக்கும்போது ஒரு வற்றாத பாசமும் – கந்தப்பனை நமது கழகத்துக்கு அடையாளம் காட்டும் அழியாத சான்றுகளாகும்" என தலைவர் கலைஞர் குறிப்பிட்டு போற்றியுள்ளார்.

தலைமைக் கழகம்

தி.மு.க.


## இந்தியா - அமெரிக்கா இடையே குவாண்டம், அணுசக்தி!

### ஏ.ஐ. ஒத்துழைப்பில் முக்கியத்துவம்!

வாஷிங்டன், மே 11-

வாஷிங்டனில் நடந்த அமெரிக்கா இந்தியா செயற்கை நுண்ணறிவு மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்ப மன்ற கலந்துரையாடலில் அமெரிக்காவுக்கான இந்திய தூதர் வினய் மோகன் குவாத்ரா பேசியதாவது:

அணுசக்தி திட்டங்களில் பயன்படுத்தப்படும் அணுக்கரு இணைவு தொழில்நுட்பம் அமெரிக்கா இந்தியா இடையேயான முன்னணி ஒத்துழைப்பு துறைகளில் குறிப்பிடத்தக்கது.

பிரான்சில் அணுக்கரு இணைவு உலையை அமைப்பதற்கான சர்வதேச ஆராய்ச்சி பரிசோதனையில் இந்தியாவும் அமெரிக்காவும் பங்கேற்றுள்ளன.

அணுசக்தி, ஏஐ, குவாண்டம் தொழில்நுட்பம் ஆகியவை இரு நாடுகளின் ஒத்துழைப்பில் முன்னணி துறைகளாக உள்ளன. அணுக்கரு இணைவு தொழில்நுட்பத்தை மேம்படுத்தி, செயற்கை நுண்ணறிவுடன் இணைத்து, குவாண்டம் முன்னேற்றத்தின் மூலம், இன்னும் சில ஆண்டுகளில் குவாண்டம் கணினித்திறன், அணுக்கரு இணைவில் புதிய கணினித் திறன்களை கொண்டு வரும் நிலைக்கு நம்மை இட்டுச் சென்றால் அது மிகுந்த உற்சாகமான ஒன்றாக அமையக் கூடும். இந்தியா அமெரிக்கா கூட்டாண்மையில் உயிரி மருந்துகள் துறையும் முக்கியமான முன்னுரிமைப் பகுதி என்பது குறிப்பி டத்தக்கது என்றார்.



சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் கிழக்கு பகுதிக்கு உட்பட்ட 6 வட்டங்களில் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல், மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி, கிழக்கு பகுதி கழக செயலாளர் எம்.டி.ஆர்.நாகராஜ், தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ்.பி.ராஜகோபால், மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் எல்பிஎப் மோகன், வட்ட செயலாளர்கள், சி.லோகநாதன், த.வ.லால், சு.மோகன் குமார், மு.விஜயகுமார், ஆ சுந்தர்ராஜன், மு.சண்முகம் மற்றும் கழக நிர்வாகிகள், கழக செயல் வீரர்களுடன் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் டாக்டர் ஏ.பி. பூர்ணிமா வீதியாக சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.